**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 25 | of | 2013 |

**2028-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8-ம் நாளான இன்று**

| | |
|---|---|
| **வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** | **தரப்பில் பி.வா.சா.2-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **கமலதாஸ்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-08.04.2026**

**பி.வா.சா.-2**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

என்னுடைய பிரமாண வாக்குமூலம் 5 வது பக்கம் 9 வது பாராவில் ரூ.5 லட்சம் ரொக்கம் பெற்றுக் கொண்டோம் என்பதைநான் ஒப்புக் கொள்கிறேன் என்று தட்டச்சு செய்யப்பட்டு பின்னிட்டு ஒப்புக் கொள்கிறேன் என்பது அடிக்கப்பட்டு அந்த இடத்தில் மறுக்கிறேன் என்று மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மறுக்கிறேன் என்று எழுதியது என்னுடைய முன்னாள் வழக்கறிஞர் ஆவார். அதனால்தான் அவரை மாற்றிவிட்டோம். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடையதுதான். படித்துப் பார்த்துதான் கையெழுத்து போட்டேன் அவ்வாறு படிக்கும்

போதுதான் மேற்படி திருத்தம் செய்து மறுக்கிறேன் என்று வழக்கறிஞரை எழுத சொன்னேன். பி.வா.சா.ஆ.1-க்கும் இந்த வழக்கிற்கும் இடையில் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் B.Sc படித்திருக்கிறேன். எனக்கு ஓரளவுதான் ஆங்கிலம் தெரியும். அந்த வழக்கில் கண்டுள்ள சொத்து விற்கப்பட்டு விட்டதால் உறுத்துக் கட்டளை வழங்க இயலாது என்று தீர்ப்பானது என்றால் சரிதான். 2009 ல் சந்தோஷ் குமாருக்கு நாங்கள் கிரய பத்திரம் எழுதி தரவில்லை, அடமான பத்திரம்தான் எழுதிக் கொடுத்தோம். என் தகப்பனார் 1ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை பத்தி 11ல் கிரய பத்திரம் எழுதிக் கொடுத்தாக ஒப்புக் கொண்டுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. என் தகப்பனாருக்கு ஆங்கிலம் தெரியாது, ஆனால் ஆங்கிலத்தில் கையெழுத்து மட்டும் போடுவார். சந்தோஷ் குமார் பெயரில் உள்ள கிரய பத்திரத்தை நீக்கரவு செய்ய என்ன நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் SP அலுவலகத்தில் புகார் கொடுத்தோம். நாங்கள் கொடுத்த புகார் Crl.OP.No.6889/2018 உத்தரவுபடி உயர் நீதிமன்றத்தால் quash செய்யப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. CC337/2015 வழக்கு பற்றி தெரியாது. Crl.OP.No.6889/2018 வழக்கில் என் தகப்பனார் ஒரு தரப்பினர் என்றும், நான் அதுபற்றி தெரிந்தே மறைக்கிறேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தம் 5 ஏக்கருக்கு ரூ.5 கோடி கிரய தொகை என்றால் சரிதான். கிரய தொகையில் ரூ. 4 கோடியே 95 லட்சம் ஏற்கனவே பெற்றுவிட்டோம் என்றால் சரியல்ல. மேலும் வாதி

ரூ.5 லட்சம் இந்த நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துவிட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி ரூ. 4 கோடியே 95 லட்சம் பெற்றுக் கொண்டதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 முதல் 9 வரை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அவை உண்மையான ஆவணங்கள் இல்லை. வா.சா.ஆ-1 முதல் 9 ல் உள்ள கையெழுத்துகள் நான் மற்றும் என் தகப்பனார் போட்டவைதான் ஆனால் மேற்படி தொகையை பெற்றுக் கொண்டு இந்த கையெழுத்துகள் போடவில்லை. கிரய ஒப்பந்ததிற்காகதான் ரூ.4 கோடியே 95 லட்சம் எங்களுக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அடமானத்திற்காக நாங்கள் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. அடமானத்தை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்ய முடியும். வா.சா.ஆ.23 செட்டில்மன்ட் பத்திரத்தில் பிளாட் நம்பர் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் சுபிக்ஷம் நகர் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்து develop ஆனதால் விலை உயர்ந்ததன் காரணமாக வாதிக்கு கிரய பத்திரம் எழுதி தர மறுக்கிறோம் என்றால் சரிதான். என் முதல்விசாரணையில் 10 மடங்கு உயர்ந்துள்ளது என்பதை சொல்லியிருக்கிறேன். தாவா தீர்ப்பாணைக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu